நெல்லுடைக்கும், மா அரைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் பொலித்தீன், கேக், குளிர்பான தயாரிப்புக்களுக்கு
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கைக்கடிகாரம்! அழகுசாதன, அன்பளிப்பு, எவர்சில்வர், விளையாட்டுப் பொருள்களுக்கு நாடுங்கள்;
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார்வீதி யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 07 புதன்கிழமை (23 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 364



# ஆயுதத்தை மட்டும் நாம் நம்பியிராமல் அனைத்துத் துறைகளிலும் வளர்வோம்!

## கலைஞர்களுடனான சந்திப்பில் தலைவர் பிரபா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 23
கட்டி எழுப்பப்படவுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராது, அனைத்துத் துறைகளிலுமே வளர வேண்டும் என்பதில் நாம் அக்கறையாக உள்ளோம்.

தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நிதர்சனம் நிறுவனத்தின் ஒளிவீச்சு, புலிகளின் குரல் தொழில்நுட்பப்பிரிவு, படப்பிடிப்புப் பிரிவுகளைச் சேர்ந்தோரை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போது தலைவர் வே. பிரபாகரன் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு துறை சார்ந்தோரும் தமது துறைகளில் தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். அந்த வளர்ச்சியின் மூலம் தான் நிறைய விடயங்களை சாதிக்க

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ஆறு ஹெலிகள், 3 விமானங்கள் வாங்குவதற்கு புதிய அரசு முடிவு

## விமானப்படையை விஸ்தரிக்கும் திட்டத்தில் தொடர்ந்து தீவிரம்

கொழும்பு, நவம்பர் 23
விமானப்படையை விஸ்தரிக்கும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசு விடாப்பிடியாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படையின் வலிமையை அதிகரிக்கும் ஒரு திட்டமாக மேலும் ஆறு ஹெலிக்கொப்டர்கள், மூன்று விமானங்கள் ஆகியவற்றை வாங்க அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் புதிதாக விமானங்களை கொள்வனவு செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கேள்விப் பத்திரங்களின் படி 6 ஹெலிகளும் 3 விமானங்களும் கொள்வனவு செய்யப்பட உள்ளன.

ஏற்கனவே கொள்வனவுசெய்யப்பட்ட ரஷ்யாவின் எம்.ஐ. 17 ரக ஹெலிகள் மூன்று கடந்த வாரம் கொழும்புக்கு வந்து சேர்ந்தன.

தற்போது விமானப் படையிடம் 11 சியாமாசெட்டி ரக விமானங்களும், 4 புக்காரா விமானங்களும், 5 சுப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி அமைச்சர்களில் ஐவர் புதியவர்கள்

கொழும்பு, நவ. 23
நேற்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட 29 பிரதி அமைச்சர்களில் ஐவர் புதியவர்கள்.

பிரியந்தினி அபேவீர, லக்ஷ்மன் கிரியெல்ல, றெஜி ரணதுங்கா, திருமதி ஹேமா ரத்னாயக்கா, ஜோன்செனவிரத்ன ஆகியோரே புதிய பிரதி அமைச்சர்கள் ஆவர். (இ-க)

## பிரதி நிதி அமைச்சராகவும் பீரிஸ் பதவி ஏற்றார்!

கொழும்பு, நவ. 23
பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் பிரதி நிதிஅமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அதே சமயம் அவர் பொறுப்பில் இருந்த வெளிநாட்டு வர்த்தக அமைச்சு, அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நீதி மற்றும் அரசியலமைப்பு விவகாரம் ஆகியவற்றில் அமைச்சராகவும்—

பிரதி நிதிஅமைச்சராகவும் நேற்று பதவிஏற்றார்.

கிங்ஸ்லிவிக்ரமரத்தனா உள்நாட்டு வர்த்தகம், வாணிகம், உணவுத்துறை அமைச்சராகப் பதவி ஏற்றார். (எ-க)

## பாசமலர் என்ற பெண்ணே காமினியைக் கொன்றாராம்!

கொழும்பு, நவ. 23
ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்கா கொலையுண்டதற்கு காரணமானவர் எனச் சந்தேகிக்கப்படும் — தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்திய — பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாசமலர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாம்.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவுத் தலைமையகம் இத்தகவலை வெளியிட்டதாக 'லங்காதிப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேற்படி பெண் கொழும்பில் தங்கியிருந்த இடங்கள் தெரியவந்துள்ளதாகவும் —

அந்த இடங்களில் ஒன்றிலிருந்து அப்பெண்ணின் புகைப்படங்கள் பலவும் விசேட பொலீஸ் குழுவினால் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும்—

குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பேச்சாளர் ஒருவரை மேற்கோள்காட்டி லங்காதிப தெரிவித்தது. (உ-6)

## கோண்டாவிலில் 'ரயில்' கண்காட்சி!

### நேற்று திறந்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 23
''பாதிவழி நடந்த பயணம் நெஞ்சில் எழும் நினைவுகள்'' என்னும் வரலாற்றுக் கண்காட்சி கோண்டாவில் இருபாலை வீதியில் அமைந்துள்ள குமரன் விளையாட்டரங்கில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

ஒரு ரயில், ஆறு ரயில் நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டு தத்ரூபமாக இக்கண்காட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரத்தில் தொடர்ந்து ஏழு நாட்கள் இந்த 'ரயில்' கண்காட்சி நடைபெறும்.

இக்கண்காட்சியை நேற்று மாலை 5 மணியளவில் யாழ். மாவட்டத் தளபதி திரு. மகான், யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் திறந்து வைத்தனர்.

அங்கு கூடியிருந்த மக்கள் முன்னிலையில் ''மாதிரி ரயில்'' ஓடிக் காண்பிக்கப்பட்டது.

தமிழீழ போராட்டத்தின் வளர்ச்சிப் பாதையைச் சித்திரிக்கும் வகையில் ஆறு ரயில் நிலையங்களுக்கு ஊடாக ரயில் செல்வதாக இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது.

கண்காட்சி சுற்றாடல் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு கண்கொள்ளாக் காட்சியாக ஒளி வீசுகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நெறியாள்கையில், யாழ். மாவட்ட வெதுப்பக சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இக்கண்காட்சி போராட்டம் இதுவரை கடந்த பாதையும்—

போராட்டம் ஏன் என்ற கேள்விக்கு விடையும்—

மலரும் தமிழீழத்தில் மக்கள் வாழ்வு எப்படி அமையும் என்பதும்— சித்திரிக்கப்பட்டுள்ளன. (ஒ-இ-15)

## 2 ஆம் கட்டப் பேச்சுக்கு அரச தரப்பில் புதியவர்கள்!

கொழும்பு, நவ. 23
விடுதலைப் புலிகளுடன் இரண்டாம் கட்டப் பேச்சு நடத்துவதற்காக யாழ். செல்லவிருக்கும் அரச தூதுக் குழுவில் முதலாம் கட்டப் பேச்சுக்கு சென்ற 4 பிரதிநிதிகளும் அடங்கமாட்டார்கள். புதியவர்கள் சிலரே அடுத்த சுற்றுப் பேச்சில் அரசுப் பிரதிநிதிகளாக பங்குபற்றுவர்.

அரச வட்டாரங்களிலிருந்து இத்தகவல் தெரிய வந்ததாக 'லங்காதீப' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டாம் கட்டப் பேச்சுகளுக்காக யாழ் செல்லவுள்ள அரசுப் பிரதிநிதிகள் சிலரின் பெயர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைப்புகளுக்கும் மதத் தலைவர்களுக்கும், மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் பரிசீலனைக்காக அனுப்பபட்டுள்ளதாகவும்—

இவர்கள் அனைவரும் இனப்பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகுபவர்கள் என்றும்—

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பெரும் எண்ணிக்கையில் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 23
மாவீரர் வாரத்தின் இரண்டாம் நாளான நேற்று குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மாவீரர் நினைவு நிகழ்ச்சிகள் மிகவும் எழுச்சிகரமாக நடைபெற்றன.

கோட்டங்கள் தோறும் வட்ட ரீதியாக அமைக்கப்பட்ட மாவீரர் ஆலயங்களில் — மாவீரர் நினைவுப் பந்தல்களில் — பெரும் எண்ணிச்கையான மக்கள் மாவீரர் இருவுருவப் படங்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர் நினைவுப் பந்தல்களுக்கு மக்கள் இரவுவரை சென்று அங்கு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியதை அவதானிக்க முடிந்தது. இந்த நினைவுப் பந்தல்கள் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு எழில்கோலம் காட்டுகின்றன.

பாடசாலைகளில் காலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் தேசியக்கொடிக்கு அஞ்சலி செலுத்தியதோடு, மாவீரர் நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

அரச, தனியார் அலுவலகங்களிலும் தேசியக்கொடி வணக்கமும், மாவீரர் நினைவுரைகளும் இடம்பெற்றன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு கோப்பாயில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தின் பின் புறத்தில் புதிய வீதி ஒன்று சிரமதான

(6ஆம் பக்கம் பார்க்க)

### பிரதி நிதி அமைச்சராக பதவிஏற்ற கையோடு

## 'மினி பட்ஜெட்'டை நாடாளுமன்றில் சமர்ப்பித்தார் பீரிஸ்

### எதிர்க்கட்சி ஆட்சேபம்

கொழும்பு, நவ. 23
நேற்றுக்காலை பிரதி நிதியமைச்சராக பதவி ஏற்ற கையோடு நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை (மினிபட்ஜெட்டை) நாடாளு 'மன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரதி நிதியமைச்சர் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்ததை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தனர்.

1993 ஆம் ஆண்டு பிரதிநிதி [illegible] ஹறோல்ட் ஹேரத் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது, இன்றைய பிரதமரான சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்தார் என்றும்—

தாம் அப்படி செய்யப் போவதில்லை என்றும்— எதிர்க்கட்சி எம்.பிக்கள் தெரிவித்தனர்.

அடுத்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கான வரவு – செலவுத் திட்டம் இது என்றும்—

வரவு – செலவுத் திட்டம் பெப்ரவரி மாதம் 8 ஆம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு எதிராக சர்வதேச அமைப்பு!

### சிங்களவரின் ஏற்பாடு

கொழும்பு, நவ. 23
புலிகளுக்கு எதிராக — சிங்களவர்களைக் கொண்ட — சர்வதேச அமைப்பு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பாரிஸ் நகரில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சிங்களப் பத்திரிகையான 'திரிசூல' தெரிவித்திருக்கிறது.

இங்கிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் மற்றும் மேற்கத்திய மத்திய கிழக்கு நாடுகளிலும் இவ்வாறான அமைப்புகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக 'தேசப்பிரேமி' பௌத்த பிக்குகள் சங்கச் செயலாளர் பெங்கமுவே நாலகதேரர் தெரிவித்துள்ளார்.

புதிதாக இந்தச் சிங்கள அமைப்புகள் உருவாக்கப்படுவதை வரவேற்று ''திரிசூல'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

### வடக்கு - கிழக்கின்

## கல்வி நிலை குறித்து ஆராய திருமலையில் விசேடமாநாடு

யாழ்ப்பாணம், நவ. 23
வடக்கு — கிழக்கு கல்வி நிலை குறித்து ஆராய விசேட மாநாடு ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெறவிருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் மாற்றங்கள், ஆசிரியர் இடமாற்றம், பாடசாலை அபிவிருத்தி போன்ற விடயங்கள் இம்மாநாட்டில் ஆராயப்படவிருக்கின்றன.

வடக்கு—கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் இந்த மாநாட்டை கூட்டியுள்ளார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட வலயப் பணிப்பாளர்களுக்கு மாகாண சபை அவசர செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது. (ஓ-3)

### கடந்தவெள்ளியன்று இடமாற்றம்

## யாழ். அரச அதிபர் பதவிக்கு பொன்னம்பலம் நியமனம்

கிளிநொச்சி அரச அதிபராகப் பணியாற்றிய திரு. கே. பொன்னம்பலம் யாழ். மாவட்ட அதிபராக கடந்த வெள்ளிக்கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு இந்த இடமாற்ற உத்தரவை வழங்கியுள்ளதாக திரு. பொன்னம்பலம் நேற்று யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதனுக்கு தகவல் அனுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டம் தொடர்பாக கொழும்பில் நடைபெறவிருக்கும் பல கூட்டங்களில் கலந்து கொண்ட பின்னர் அவர் அடுத்தமாதம் யாழ். வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். அரச அதிபராகப் பணியாற்றிய திரு. கா. மாணிக்க வாசகர் சுகவீனம் காரணமாக தாம் பதவியில் தொடர முடியாத நிலையில் இருப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்ததை அடுத்து திரு. பொன்னம்பலம் யாழ். அரச அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ-3)

## வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம்

கொழும்பு, நவ. 23
வங்காள விரிகுடாவில் இலங்கையின் தென்மேற்குக் கரையிலிருந்து சுமார் நானூறு கிலோ மீற்றர் தொலைவில் தாழமுக்கம் ஒன்று ஏற்பட்டிருப்பதாக கொழும்பில் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இதனால் நாட்டில் பரவலாக மழை பெய்யும் என்றும்—

மேற்குக் கரையோரப் பிரதேசத்தில் கடல்பகுதி கடும் கொந்தளிப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் இலங்கையின் தென் — மேற்கு பகுதிக்கும்—

(6ஆம் பக்கம் பார்க்க)

## மல்லியின் தலையை எரித்து விட்டனராம்!

கொழும்பு, நவ. 23
விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் கேணல் மல்லியைக் கொன்று அவரது தலையைத் துண்டித்து எடுத்துச் சென்ற ஸ்ரீலங்காப் படையினர்—

மல்லியின் தலையைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக எரித்துவிட்டனராம்.

இராணுவ வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-6)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 23
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஓ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை பிரதேசசபை

**கேள்வி அறிவித்தல்**

1995ஆம் ஆண்டு
இறைச்சிக் கடைகள், சந்தைகள் குத்தகை

| | |
|---|---|
| கேள்விப் படிவம் வழங்கல் | — 05—12—1994 பி.ப. 3மணி வரை |
| கேள்விப் படிவம் ஏற்றல் | — 09—12—1994 பி.ப. 2மணி வரை |
| கேள்விப் படிவம் திறத்தல் | — 09—12—1994 பி.ப. 2-30 மணி |

மேலதிக விவரங்களை பருத்தித்துறை பிரதேச சபையிலும், அதன் புலோலி, குடத்தனை, செம்பியன்பற்று அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஆ. சிவசுவாமி,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

பருத்தித்துறை பிரதேசசபை அலுவலகம்,
புலோலி,
22-11-1994. [சி-9723]



யா/கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை
எமது பழைய மாணவன்
மறத்தமிழன், கர்மவீரன், மாவீரன்
செல்வன் நடராசா சிவபாலன் (ஜீவன்)
அவர்களின்

**மாட்சி நயப்பு அரங்கு**



வீரவேங்கை 2ஆம் லெப்டினன்ட்
ந. சிவபாலன் (ஜீவன்)

மண்ணின் மைந்தனாய்: 15 — 12 — 1975
மாவீரனாய்: 11 — 07 — 1991

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 24 - 11 - 1994 வியாழக்கிழமை காலை 9மணி

தலைவர்: திரு. இ சிவபாதசேகரம் (அதிபர்)

★ மங்கல விளக்கேற்றல்
★ மௌன நினைந்துருகல்
★ மாவீரர் குடும்பத்தினர் கௌரவிக்கப்படுதல்
★ தலைமையுரை
★ கலை நிகழ்ச்சிகள் - பேச்சுக்கள்

முதன்மைப் பேச்சாளர்
திரு. இளம்பரிதி அவர்கள்
(அரசியல்துறைப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)

★ மாட்சி நயப்புப் பேருரையை ஏற்போர் உரை: திரு. நா. நடராஜா அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. நா. நடராஜா குடும்பத்தினர்,
பாடசாலை முகாமைத்துவக்குழு.

[8030]



**2-ம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில்: 29 — 09 — 1972
ஆண்டவன் அடியில்: 23 — 11 — 1992

பேரின்பநாயகம்
ஜோர்ஜ் சுரேஸ்குமார்
திதி: 23 — 11 — 1994

பெற்றமனம்பித்து பிள்ளைமனம் கல்லென்பார்கள் ஐயோ? நான் பெற்ற மகனே! கனவிலென்றாலும் அம்மா! என்று ஒரு ஆறுதல் மொழி கூறாயோ என்று ஏங்கித் தவிக்கும் இத்தாயினுள்ளத்தை ஒருதரம் திரும்பிப் பார் ஐயா!

உமது ஆத்ம சாந்திக்காக நிதம் இறைபதம் பணிந்து நிற்கும்;

உமது அன்புப் பெற்றோர்:
திருமதி பேரின்பநாயகம் குடும்பம்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி. [7814]


# பாதிரி பதவியை துறக்க விரும்புகிறார் அரிஸ்ரைட்

போர்ட் -ஓ-பிரின்ஸ், நவ. 23

ஹெய்ட்டியின் ஜனாதிபதியாக மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டுள்ள கிறிஸ்தவ பாதிரியாரான ஜீன் பேட்ரண்ட் அரிஸ்ரைட் தம்மை மதப்பணியில் இருந்து விடுவிக்குமாறு வத்திக்கானைக் கேட்டுள்ளார்.

'நாட்டை கட்டி எழுப்பும் பணியில் நான் தீவிரமாக முழு நேரமும் ஈடுபடவிருக்கின்றேன். ஆகவே மதப்பணியில் நான் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது' — என்று ஹெய்ட்டியின் ஆயர்கள் அமைப்பின் தலைவரும், பேராயருமான பிராங்கோயி கெயில்லொற்றுக்கு அனுப்பிய கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

பரிசுத்த பாப்பரசர் தமது கோரிக்கையை ஏற்கும் வரை அரிஸ்ரைட் மதகுருவாகவே கணிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பதவி வெற்றிடம்**

இப்பல்கலைக்கழகத்தில் பின்வரும் நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து 1994 - 12 - 19ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பதவி:**
தொழிலாளி தரம் III

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 1,920— 3x40— 2,040/— மாதமொன்றுக்கு.
(இவை தவிர அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுப் படியுட்பட ஏனைய படிகளும் வழங்கப்படும்)

**தகைமைகள்:**
1. எட்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயது – விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**தெரிவு:**
பொதுவுளச்சார்புப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

**குறிப்பு:**
1994-04-08ஆம் திகதிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தாபனச் சுற்றறிக்கைக் கடித இல. 07/1994 இற்கு அமைய, உணவு முத்திரை / ஜனசவிய விற்கு உரித்தான குடும்ப அங்கத்தவருக்கும், தீவிரவாதச் செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவருக்கும் அவற்றை உறுதிப்படுத்துமிடத்து மேலதிகப்புள்ளிகள் வழங்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந்நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது நிதிக்கிளையில் ரூபா 20/-ஐச் செலுத்தி மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர், அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/- இற்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையுடன் 23x10 ச.மீ. அளவுடையதும், சுயமுகவரியிடப்பட்டதும், ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையிலிருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994-11-19 (சி-9715)


## மர நடுகை வைபவம்

சூழல் பாதுகாப்பு மர நடுகைக்கான கொடிவாரத்தை முன்னிட்டு மாவீரர் சோலை தொடர் திட்ட மரம் நாட்டு விழா கடந்த ஒக்ரோபர் 28 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்மராட்சி கோட்ட சூழல் பாதுகாப்புப் பகுதி கண்காணிப்பாளர் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

கடந்த வருடம் 10 ஏக்கரில் பல இன மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டும் 10 ஏக்கர் மரங்கள் நடுகை செய்யவும் இச் சோலையினை 30 ஏக்கரில் விஸ்தரிப்பதற்காகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# உலகில் எடை கூடிய பெண் தொடர்ந்த வழக்கு!

வாஷிங்டன், நவ. 23

உலகின் மிகப் பருமனான பெண்ணாக உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற அமெரிக்க பெண் ரோஸலின் பிராட்போர்ட், தம்மை ஒரு யானை என்று வர்ணித்ததற்காக 'என்குபரர்' பத்திரிகை மீது 10லட்சம் அமெரிக்க டொலர் நஷ்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

1987இல் இவரே உலகின் மிகப் பருமனான பெண்ணாக கணிக்கப்பட்டார்.

476கிலோ(1050 இறாத்தல்) எடையாக இருந்த அவரது பெயர் அந்த ஆண்டின் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றது,

1992இல் அவரது எடை 142கிலோவாக 314இறாத்தல்கள்) வீழ்ச்சி அடைந்தது. ஒரு பெண்ணின் எடையில் இவ்வளவு வீழ்ச்சிகண்டதும் ஒரு உலக சாதனையாகும். இது 1994ஆம் ஆண்டில் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுகிறது.

(இ-எ)

## க. பொ. த. (சா/த) பரீட்சை

# 1995முதல் தமிழ் இலக்கியம் ஒரு பாடமாக அமையும்

வலிகாமம் தெற்கு நவ. 23

1995ஆம் ஆண்டில் இருந்து க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கு தமிழ் இலக்கியம் ஒரு பாடமாக அமைய இருக்கின்றது. இப் பாடம் விருப்பத்துக்குரிய பாடமாக பரீட்சையில் அமையும்.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் அனுசரணையுடன் விருப்பத்துக்குரிய பாடமாகிய தமிழ் இலக்கியப் பாடத்துக்கான பாடப்பகுதிகள் தெரிவு செய்யும் வேலைகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பியின் அனுசரணையுடன், யாழ். பல்கலைக்கழக நுண்கலை பீடத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் இவ் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பாடப்பகுதிகளை தெரிவு செய்யும் பணியில் யாழ். கல்விக்கோட்ட சிரேஷ்ட தமிழ் முதன்மை ஆசிரியர் திரு.எம். எஸ். ஸ்ரீதயாளன், வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி கலாநிதி சண்முகநாத பிள்ளை ஆகியோர் ஈடுபட்டுவருகின்றனர்.

1995ஆம் ஆண்டு நடைமுறைக்கு வர உள்ள இப் பாடம் ஆண்டு 9,10,11களில் கற்பிக்கப்படும்.

1995இல் முதன் முதல் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் இப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படுவர்.

விருப்பத்துக்குரிய பாடமாக க.பொ.த. சாதாரண பரீட்சைகளுக்கு தற்போது ஆங்கில, சிங்கள பாடங்கள் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. [க-152]

## புலிகளின் குரல் வானொலியில்

**23 — 11 — 1994**
**புதன் இரவு**

★ 8-01 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி — சி.கண்ணம்மா எழுதிய ''முன்னேற்றப்படிகளும் மூலக்கருக்களும்''
★ 8-20 — ஏர்முனை— ''ஞானம் பிறந்தது'' தனிநடிப்பு
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — லெப்டினன்ட் கேணல் போர்க் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— காயத்திரி எழுதிய ''விடியும் தேசத்தின் விளக்காய் ஆனவன்''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**24 —11 — 1994**
**வியாழன் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15—விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
★ 7-40 — மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி— ந. கிருஷ்ணா எழுதிய ''செஞ்சுடர் ஏற்றிச் சென்ற மாவீரர்''
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## கூட்டுறவு ஆணையர் சுற்றுநிருபம்

யாழ்ப்பாணம், நவ. 23

சட்டப்படியான கிளைக் குழு தேர்தல்களைப் பின்போடுதல் கூட்டுறவுக் கொள்கைகளுக்கும், சட்ட விதிகளுக்கும் முரணான செயலாகும்.

இவ்வாறு கூறும் சுற்றுநிருபமொன்றினை பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் தலைவர்களுக்கு வட. கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை அனுப்பி வைத்துள்ளார்.

கிளைக்குழுத் தேர்தல்களை உடனடியாக நடத்த [illegible] அந்த சுற்றுநிருபத்தில் அதி[illegible] (க-17)

## குடும்பவிவர திரட்டுபடிவம்

சண்டிலிப்பாய், நவ. 23

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கிராம அலுவலர்கள் ஊடாக குடும்ப விபரத்திரட்டு படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு முன்னுரிமைப் படி இப்படிவங்கள் வழங்கப்படுவதாகவும், இவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு ஐந்து ரூபா கட்டணம் செலுத்தி மேற்படி படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## வீதிச் சீர்கேடு

சண்டிலிப்பாய், நவ. 23

சங்கானையிலிருந்து சித்தன்கேணி ஊடாக சுழிபுரம் செல்லும் பிரதான வீதி குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு மிகவும் சீர்கெட்ட நிலையில் உள்ளது. இதனால் சைக்கிளில் செல்வோர் கான் பக்கமாக ஒற்றையடிப் பாதையால் சென்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வாகன விபத்துகளும் இங்கு அடிக்கடி இடம் பெறுகின்றன.

(க-135)

## தபால்களைச் சேர்க்குக!

யாழ்ப்பாணம், நவ. 23

இன்று பருத்தித்துறை துறைமுகம் வந்து நாளை திருகோணமலை நோக்கி திரும்பும் 'பிளாம்பயான்' கப்பலில் தபால்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக இன்று புதன்கிழமை மாலை 4மணிக்கு முன்பாக தபால்களை யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள பெட்டியில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் கேட்டுள்ளார்

(க-17)


பண்டத்தரிப்புக் கோட்ட
தனியார் கல்வி நிறுவன
ஒன்றியம் நடத்தும்

**மாவீரர் நாள் விழா**

இடம்:- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியலய மண்டபம்.

காலம்:- 24-11-94 வியாழன் மாலை 6-00மணி

நிகழ்வுகளாக விடுதலைப்புலிகள் பிரமுகர்களின் நினைவுப் பேருரைகளும், மாவீரர் புகழ்பாடும் கலை நிகழ்வுகளும், பட்டிமண்டபமும் இடம்பெறும். அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

முக்கிய குறிப்பு:
அன்றைய நாள் எமது கோட்டத் தனியார் கல்வி நிறுவன, பிரத்தியேக வகுப்புக்கள் அனைத்திற்கும் மாலை நேரம் விடுமுறையாகும்.

(சி 9724)



**ACCOUNTANT**

A Leading establishment in Jaffna needs a fully / partly qualified Accountant. The suitable person should be able to prepare the final Accounts and also advice in matters such as cost control, pricing etc.

Apply within 7 days with curriculam vitae and names & addresses of two non - related referees to.

Advt. No. 718,
C/o UTHAYAN,
Jaffna.

(33858)



வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

**கேள்வி அறிவித்தல் - 1995**

01—01—1995 முதல் 31 - 12—1995 வரையுள்ள காலப்பகுதிக்கு வலி. வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் இயங்கும் சந்தைகள் ஆடு/மாட்டிறைச்சிக்கடைகளுக்கான கேள்விகள் 16—12—1994 ஆந் திகதி பிற்பகல் 2.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். 15 - 12 - 1994 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை கேள்விப்பத்திரங்களை உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

நா. வேதநாயகன்
விசேட ஆணையாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை.

96, யாழ். வீதி.
மல்லாகம்.
07-11-1994. (சி/5741)



தவறவிட்டது

**கிடைத்தது நன்றி**

நேற்று (22-11-94) காலை யாழ். / மாதகல் சிற்றூர்தி சேவைச் சங்கத்தைச் சார்ந்த த/6188 இலக்க சிற்றூர்தியில் என்னால் தவறவிடப்பட்ட 1¾ பவுண் கைச் சங்கிலியினை கண்டெடுத்து சிற்றூர்தி சேவைச் சங்க இணையக் காரியாலயத்தில் ஒப்படைத்து எனக்கு மீண்டும் கிடைக்கப் பெறச்செய்த அச்சிற்றூர்தியின் சாரதியான திரு.சு. மகேந்திரன் அவர்களின் மேன்மையான குணத்தை பாராட்டுவதுடன் எனது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கிருஸ்ணராசா
இராமநாதபுரம், கிளிநொச்சி.
(33870)



திருமறைக் கலாமன்றம்
**கவின் கலைகள் பயிலகம்**
**SCHOOL OF FINE ARTS**
புதிய மாணவர்களைச் சேர்த்தல் — 1995

சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு கீழ்க்காணும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

நடனம், வாய்ப்பாட்டு, வயலின்
வீணை, புல்லாங்குழல்
ஓர்கன், கிற்றார்

விண்ணப்ப முடிவு திகதி 15 - 12 - 1994

வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கு மாணவர்கள் தயார் செய்யப்படுவர்.

விண்ணப்பப் பத்திரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்,

அதிபர்,
கவின் கலைகள் பயிலகம்.

223, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/9725)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### 2 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் உட்பட

# 70 பொலிஸ் அதிகாரிகள் மீது

# புலனாய்வுத்துறை விசாரணை

கொழும்பு, நவ.23

பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக சுமார் 70 பொலிஸ் அதிகாரிகளை விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தது இரண்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், சில சிரேஷ்ட பொலிஸ் அதிபர்கள், பொலிஸ் அதிபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களில் அடங்கியுள்ளனர் என்று அதிகாரபூர்வ பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விசேட பொலிஸ் குழுவின் தலைவராக பொலிஸ் அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொருவர் பற்றிய விசாரணை முடிவடைந்ததும் அது பற்றிய அறிக்கை பொலிஸ் மா அதிபரிடம் கையளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சம்பந்தமான குற்றச் சாட்டுகளை மட்டுமே இவ்விசேட குழு விசாரித்து வருகிறது.

பொலிஸ் அதிகாரிகள் மீதான லஞ்சக் குற்றச் சாட்டுகளை இக் குழு விசாரிக்க அதிகாரம் வழங்கப்படவில்லை.

விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்படும் பொலிஸ் அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா தீர்மானிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## ஹேமாவுக்கு எம். பி. பதவி கிடைப்பது சந்தேகம்

### பதில் அளிக்க ரணில் மறுப்பு

கொழும்பு, நவ. 23

ஹேமா பிரேமதாஸாவை ஐ.தே.க. தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக நியமிப்பீர்களா என்ற கேள்விக்கு பதில் அளிக்க ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மறுத்து விட்டார்.

'ஹேமாவை எம். பியாக நியமிப்பது பற்றி கொல்லப்படுவதற்கு முன்னர் காமினி என்னுடன் கலந்தாலோசிக்க வில்லை.

ஹேமாவை எம். பியாக்குவீர்களா என்று ஏன் என்னைக் கேட்கின்றீர்கள்? மக்கள் இதில் அக்கறை செலுத்த வில்லை' — என்று ரணில் சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

'ஹேமாவை எம்.பியாக்குவீர்களா என்ற கேள்விக்கு பதில் வேண்டுமானால் கொழும்பு மத்தி, கொழும்பு வடக்குக்குச் சென்று கேளுங்கள்'—என்றும் ரணில் கூறினார். (இ-எ)

## பரிசளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 23

சைவ பரிபாலன சபை கடந்த 20ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடத்திய நாவலர் நாவன்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்கும் வைபவம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பரிசளிப்பு நிகழ்ச்சி நாவலர் குருபூசைத் தினமான நவம்பர் 26ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. பரிசளிப்புக்கான புதிய திகதி பின்னர் வெளியிடப்படும் என தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## வீடமைப்புத் திணைக்களம் ஆண்டு இறுதியில் கலைப்பு

கொழும்பு, நவ. 23

தேசிய வீடமைப்புத் திணைக்களம் இவ்வாண்டு இறுதியுடன் கலைக்கப்படவுள்ளது.

திணைக்களத்துடனான தங்கள் தொடர்புகளை பொதுமக்கள் அடுத்த இரண்டு வாரங்களில் பூர்த்தியாக்கி விட வேண்டும் என்றும்—

இது குறித்து திணைக்களத்துடன்உடனடியாக தொடர்பு கொள்ளும்படியும் அரசாங்கம் கோரியுள்ளது.

வீடமைப்பு, சொத்து உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வரும் மாதம் 25 ரூபாவுக் கீழ்ப்பட்ட வாடகை செலுத்தப்படும் வீடுகள் தொடர்பாக குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளை வழங்கும் வேலையை தேசிய வீடமைப்புத் திணைக்களம் பூர்த்தியாக்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திணைக்கள வட்டாரங்களின் படி சுமார் 20 ஆயிரம் உறுதிகள் வழங்கப்பட்டு விட்டன. [இ-எ]

## வீர வணக்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாவட்டத்தில் மாவீரர் நாள் வீரவணக்கக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இன்று புதன்கிழமை 7-30 மணி முதல் நடைபெறும் இடங்கள் வருமாறு:

நல்லூர் வட்டம் — திருநெல்வேலி கிழக்கு மாலையம்மன் ச.ச.நி.

கோப்பாய் வட்டம் — உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்

சண்டிலிப்பாய் வட்டம் — ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயில் முன்றில்

கொடிகாமம் வட்டம் — எழுதுமட்வாழ் சிறீகணேசா வித்தியாலயம்

கரவெட்டி வட்டம் — கரவெட்டி கிழக்கு விநாயகர் வி.

தீவகக் கோட்டம் — அரியாலை சாம்சன் குடியிருப்பு.

## வசந்தராஜாவை அழைத்து அமைச்சர் நேரில் விளக்கம்

கொழும்பு,நவ.23

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜாவுக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து அவரிடம் தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா விசாரித்ததாக 'யுக்திய' சிங்கள வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி வசந்தராஜாவை தமது அமைச்சுக்கு அழைத்து குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்ததுடன் அவதானமாகச் செயல்படுமாறு அவரை அமைச்சர் எச்சரித்ததாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சியும், வானொலியும் தமது முன்னணிக்கு எதிராக செயல்பட்ட போதும் பொதுத்தேர்தலில் முன்னணி வெற்றி பெற்றதையும் வசந்தராஜாவுக்கு அமைச்சர்சுட்டிக் காட்டினார் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-10)

## கொழும்பில் விடுதியில் தங்குவோரை கண்காணிக்க சிவில் உடை பொலீஸ்

கொழும்பு, நவ. 23

கொழும்பு மாநகரில் உள்ள விடுதிகளில் தங்குபவர்கள், அவர்களைச் சந்திக்கச் செல்பவர்கள் ஆகியவர்கள் குறித்து கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள சிவில் உடையில் பொலீஸாரைச் சேவையில் ஈடுபடுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகருக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இம்முடிவை மேற்கொண்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பு நகரில் கால் நடையிலான பொலீஸ் ரோந்தை மீண்டும் ஆரம்பிப்பது என்றும் பிரதி பொலீஸ் மா அதிபர் தீர்மானித்திருக்கிறார். (இ-6)

## சகலதையும் இறைவனாக காண்பதே பக்தி ஆகும்

### இதுவே சாயிபாபா சிந்தனை

மனிதன் பரிபூரண சாந்தியை, மன அமைதியை அடையும் வழியைக் காட்டவே மதங்கள் எழுந்தன. ஒவ்வொரு மதத்திலும் பல்வேறுபட்ட தத்துவக் கோட்பாடுகளையும் நாம் காண்கிறோம். இவை மனிதனுக்கு எவ்வளவு தூரம் சாந்தியை நல்கின என்பது கேள்விக்குறியே.

தான் வேறு, அயலவன் வேறு, கடவுள் வேறு என்று எண்ணும்போது சாந்தி கிட்டவே கிட்டாது. இது தெளிந்த மனித அனுபவம். ஆனால் அநேகமான மதக் கோட்பாடுகள் இவ்வாறான முத்திறப் பாகுபாட்டை ஆதரிப்பனதயே நாம் காண்கிறோம். இதனால் தான் இவ்வாறான கோட்பாடுகள், மனிதனுக்கு சாந்தியைத் தர முடியவில்லை.

அத்வைத தத்துவம் ஒன்றே, எமக்கும் கடவுளுக்கும் இடையேயோ, எமக்கும் எம்மை அடுத்த ஜீவராசிகளுக்கும் இடையேயோ பேதத்தைக் கற்பிக்கவில்லை.

ஒரே ஒரு வஸ்துவே நாம் காணும் உலகுக்கும் உயிர்களுக்கும் மூலகாரணம் என்



பதை அது வலியுறுத்துகிறது.

வேத உபநிடத வாக்கியங்களான ஏகம் ஸத், அஹம் பிரம்மாஸ்மி, தத்துவம் அஸி போன்றன எல்லாம் எமக்கும் இறைவனுக்கும் இடையே பேதமில்லை என்பதை வெளிப்படையாக, நேரடியாக எடுத்துக் காட்டுகின்றன. இனிமையும் எளிமையும் தெளிவும் அவ்வாசகங்களிலே [illegible]

பகவான் பாபா கூறுகிறார்; உடம்பாக, மனமாக, ஜீவனாக இருக்கும் நீ ஒரு கனவே. உண்மையில் நீ சத்து, சித்து, ஆனந்தம் ஆவாய். இப்பிரபஞ்சத்தின் கடவுள் நீயே. பிரபஞ்சத்தை தோற்றுவிப்பதும் ஒடுக்குவதும் நீயே.

தொடர்ந்து பாபா கூறுகையில், இந்த எல்லையற்ற பரந்த பரத்துவத்தை அடைய, துன்பம் தருகின்ற, சிறிய, சிறைபோன்ற ஜீவ நினைப்பு போகவேண்டும் என்கிறார்.

பக்தி என்பது அழுவது அல்ல; பக்தி என்பது எல்லாவற்றையும் இறைவனாகக் காண்பது! எல்லாவற்றுள்ளும் இறைவனையே காண்பது என்றும் கூறுகிறார்.

பகவானுடைய இவ்வாசகங்களில் இருந்து அவர் ஞானத்தையும் பக்தியையும் இணைக்கும் பாங்கினைக் காண்கிறோம். அத்வைத மதத்தின் இரத்தினச் சுருக்கம் இதுவேயாகும். பகவத் கீதை கூறும் ''அனன்யாச் சிந்த'' என்கின்ற, அனன்ய பக்தி நிலை இதுவேயாகும். பொறாமை, அகங்காரம், விருப்பு, வெறுப்பு ஆகியவைகள் நீங்கிய சாந்தி நிலை இதுவேயாகும். ★

— சு. சிவதாஸ்

**பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 69 ஆவது பிறந்த தினம் இன்று**


## ஓராண்டு நினைவஞ்சலி



**ஆறுமுகம் இரத்தினம்**
**(NAR)**

தாயின் மடியில்: **30 — 07 — 1931**
இறைவனடியில்: **05 — 12 — 1993**

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
அன்பின் படி கல்லாய் திகழ்ந்த
ஆசையுள்ள தந்தையே!
ஆண்டோ ஒன்று செல்லினும்
அப்பா அன்பு என்றுமே
எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மனைவி, மக்கள்,
மருமகள், மாமி.

51 மானிப்பாய், றோட்
யாழ்ப்பாணம்.

(33754)

## அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற இல. 242/ தத்துவ வழக்கில் 2ஆம் பிரதிவாதியாகிய சாவகச்சேரி, நுணாவில் மேற்கை வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது இல. 28 பீ கின்னோஸ் அவெனியு, பம்பலப்பிட்டி, கொழும்பில் வசிப்பவருமாகிய நோ எல் மனோகரன் சாமுவேல் ஆகிய நான் மேற்சொல்லப்பட்ட தத்துவ வழக்கின் 3ஆம் பிரதிவாதியாகிய சாவகச்சேரி நுணாவில் மேற்கு (தற்சமயம் கனடாவில் வதியும்) திரு. றெஜினோல்ட் செல்வரட்னம் சாமுவேல் அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட, சாவகச்சேரி பிரசித்த நொத்தாரிசு திரு. வி. பொ. கார்த்திகேசு அவர்களால் நிறைவேற்றி முடிக்கப்பட்ட 27-10-85 திகதியையுடைய 10556ஆம் இலக்கமுடைய பொது அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக பகிரங்கப்படுத்துகின்றேன்.

—நோ எல் மனோகரன் சாமுவேல்.

(சி-9713)

## அற்றோணித்தத்துவம் இரத்துச் செய்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றின் இல: 242/ தத்துவ வழக்கில் 1 ஆம் பிரதிவாதியாகிய சாவகச்சேரி, நுணாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்சமயம் இல: 28 பீ கின்னோஸ் அவெனியு, பம்பலப்பிட்டி, கொழும்பில் வசிப்பவருமாகிய நெவில் தயாகரன் சாமுவேல் ஆகிய நான் மேற்படி வழக்கின் 3 ஆம் பிரதிவாதியாகிய சாவகச்சேரி நுணாவில் மேற்கு (தற்சமயம் கனடாவில் வதியும்) திரு. றெஜினோல்ட் செல்வரட்னம் சாமுவேல் அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்ட சுவிற்சலாந்து நாட்டின் நொத்தாரிசு மரியன் யகோபி அவர்களால் நிறைவேற்றப்பட்ட 18 - 12 - 1985 இல. 233 ஆம் இலக்க விசேட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக பகிரங்கப்படுத்துகின்றேன்.

— நெவில் தயாகரன் சாமுவேல்.

(சி/9714)

மருதனார்மடம்
**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**
நடத்தும்

## மாவீரர் தினவிழா

இன்று (23 — 11 — 1994) புதன்கிழமை
மாலை 5-30 மணி
இடம்: இணுவில் இந்துக்கல்லூரி

**மாவீரர் மாண்புரைகள்**

2 நிமிட அகவணக்கம்
தலைமையுரை: இ. பாலச்சந்திரன்
வரவேற்புரை: S. குணசீலன்
சிறப்புரை: க. பொழிலன் (வலிகாமம், கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர்),
பண்டிதர் ஈஸ்வரநாதபிள்ளை
கவிதை அரங்கு:
காற்று மாறினால்
திரு. ச. வே. பஞ்சாட்சரம் தலைமையில்
சுன்னாகம் கருணா கல்விநிலைய மாணவர்கள்
A. ஜெயக்குமரன் முத்து விஜயராகவன்
M. முகுந்தன் மதிநந்தினி
பேச்சு: ந. யசிந்தன்
(றோயல் கல்வி நிலையம், சுன்னாகம்)
புரட்சி கீதங்கள்:
(எவரெஸ்ட் கல்வி நிலையம், இணுவில்)
மானிப்பாய் கலையரசி கலை நாடக பயிற்சி கல்லூரி வழங்கும்
''புதிய வரலாறு''
(நாடகம்)
நன்றியுரை: க. கருணைநாயகம்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
— விழாக்குழுவினர்.

(சி-9716)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லத்துரை கனகசபாபதி**
(முன்னாள் A. G. A. ஒட்டுசுட்டான்)

மலர்வு: **22 — 03 — 1941**
உதிர்வு: **26 — 11 — 1991**
திதி: 23 — 11 — 1994

கல்வி நல்லறிவும் கடவுள் பக்தியும்
பல்லுயிரிரக்கமும் படிறிலா வொழுக்கமும்
பிறளா வாய்மைப் பெருங்குணமுடைமையுங்
கறையாய் வளரும் களையெலா மகன்றோன்

நும்மை நாடோறும் நினைத்திடும்:
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மாமி,
உறவினர்கள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(33859)

## நான்காவது ஆண்டு நினைவு மீட்டல்



தோற்றம்: 06 — 10 — 1927
மறைவு: 23 — 11 — 1990

அமரர்
**சண்முகம் ஞானப்பிரகாசம்**

ஏழை மக்களின் துயர் துடைக்கப் பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தி தன் வாழ்நாளை மக்களுக்காகவே அர்ப்பணித்த உலர் வலய அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும், இணைப்பதிகாரியுமாகிய

**அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம்**

அவர்களின் நான்காவது நினைவு ஆண்டில் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறப் பிரார்த்தித்து நிற்கும்.

யாழ். மாவட்ட உலர் வலய
பணிப்பாளர், பணியாளர்,
கழக அங்கத்தவர்கள்.

(33864)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வதிரி உல்லியநொல்லை அம்மன் கோயில் சூழலில், அரசடிப் பாடசாலை நெல்லியடி பட்டினசபைக்கு அருகாமையாக வதிரி - திக்கம் பிரதான வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அரியகுணராசா, செல்லையா பாடசாலை வீதி, வதிரி, கரவெட்டி. (33862)

## விற்பனையாகிறது

மெய்கண்டான் நாட்காட்டி (கலண்டர்) சிவம் அச்சிடும் கலண்டர் பெரிது சிறிது மற்றும் சகல விதமான கலண்டர், பொக்கட் கலண்டர்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்கும் இடம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (தி-9701)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நான்கு நாட்கள் வளர்ச்சி அடைந்த பிலிமத் கறுப்பு வரிக்குஞ்சுகள், தனிச்சிகப்பு குஞ்சுகள், வெள்ளை சேவல் குஞ்சுகள் உடன்விற்பனைக்கு உண்டு. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதி ஊடாக, சிங்கம் வீதி, உடுவில். (33865)

## தவறிவிட்டது

மதவடிக்கும், உதயன் விளம்பரப்பணிமனை சுன்னாகத்திற்கும் இடையில் 18-11-94 வெள்ளிக்கிழமை கைலேஞ்சியுடன் சிறுவர்களுக்கான நகைகள் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து "யோகா கலையகம்", சுன்னாகம் உதயன் பணிமனை அருகில் ஒப்படைக்கவும். (7812)

## மணமகள் தேவை

ஜேர்மனியில் தொழில்புரியும், வயது 30, உயரம் 5½, மூலம் 2ஆம் பாதம், இந்து மணமகனுக்கு ஓரளவு படித்த அழகிய மணப்பெண் தேவை. ஜேர்மனியில் வசிக்கும் பெண் அல்லது பெண்ணை அனுப்பக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். மே/பா உதயன், விளம்பர இல. 716, யாழ்ப்பாணம். (33847)

## மணமகன் தேவை

இந்து, சைவ போசனம், வயது 29, உயரம் 5' நட்சத்திரம் சதயம், செவ்வாய் தோஷமற்ற பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்கு, ஆசிரியர் அல்லது அரச துறையில் தொழில்புரியும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். சகல விவரங்களுடன் தொடர்பு: இல. 715, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [33785]

கௌரவமான இந்து சமயத்தைச் சேர்ந்த G.C.E./A/L படித்த தோசமற்ற சித்திரை நட்சத்திரத்தில் துலா இராசியுள்ள 1963ஆம் ஆண்டு பிறந்த தங்கைக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலைபார்க்கும் படித்த பட்டம்பெற்ற மணமகனைத் தேடுகிறார். கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: இல: 719, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33866)

## "நீமியா உரம்"

அமோக விளைச்சலுக்கும், பூச்சிபுழுக்களின் தாக்கத்தை எதிர்க்கவும் சிறந்த இயற்கை உரம் "நீமியா உரம்" பாவித்து அதிக பயன் பெறுங்கள். "மில்க்வைற்". (தி-9712)

## ஜெனறேட்டர் வந்துள்ளது

கொழும்பு, நவ. 23 யாழ். போதனா சாலைக்குக் கொழும்பிலிருந்து 200 கே.வி. ஜெனறேட்டர் ஒன்று கப்பலில் வந்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி. ந. கனகரத்தினம் தெரிவித்துள்ளார். (க-30)

ஸ்ரீமுத்து விநாயகர் துணை

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 — 10 — 1923

மறைவு: 03 — 12 — 1993

### அமரர் முத்துத்தம்பி தர்மலிங்கம்

(இணுவில் கிழக்கு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய பரிபாலகரும், பூசகரும், பிள்ளையார் ஸ்ரோஸ் உரிமையாளரும்)

திதி: 23 - 11 - 1994

ஓராண்டு சென்றதப்பா! நீங்கள் மறைந்தாலும் எங்கள் மனம் இன்னும் ஆறவில்லை. பாசத்துடனும் பரிவுடனும் எம்மை வளர்த்த எங்கள் அன்புத் தந்தையே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இணுவில் கிழக்கு ஸ்ரீ முத்து விநாயகரின் திருவடியை வேண்டி நிற்கிறோம்.

—குடும்பத்தினர்.

'பிள்ளையார் ஸ்ரோஸ்'
இணுவில் கிழக்கு.
அங்கிலிப்பாய்,
இணுவில். (33855)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 — 01 — 1933

உதிர்வு: 03 — 12 — 1993

### அமரர் சின்னப்பு திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற லிகிதர், திருமலை துறைமுகக் கூட்டுத்தாபனம்)

திதி: 23 — 11 — 1994

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டானாலும் அப்பா! ஆறவில்லை எம் நெஞ்சம். இவ்வுலகில் உங்களைப் போல் யார் வருவார் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்;

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
நண்பர்கள்.

"பொன் அகம்"
சண்டிலிப்பாய். (8024)

தசாக கிருகயக்ஞ

## ஆத்ம சாந்தி அழைப்பு

### திருமதி நடராஜக்குருக்கள் மீனாட்சி அம்மா

அன்புடையீர்!

14 - 11 - 1994இல் சிவபதம் அடைந்த எமது தாயார் திருமதி நடராஜக்குருக்கள் மீனாட்சி அம்மா அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| தசாகம் | — | 23 — 11 — 1994 | புதன்கிழமை |
| ஏகோதிஷ்டம் மாசியம் புண்ணியாகம் | — | 24 — 11 — 1994 | வியாழக்கிழமை |
| சபிண்டீகரணம் | — | 25 — 11 — 1994 | வெள்ளிக்கிழமை |
| கிருகயக்ஞம் | — | 26 — 11 — 1994 | சனிக்கிழமை |

மேற்படி ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

இங்ஙனம்;
மக்கள், மருமக்கள்.

வெட்டுக்குளம்
புவனேஸ்வரி அம்மன் கோவில்,
அரியாலை. (33863)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## வழங்குனர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 1995

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப்பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1994 டிசம்பர் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வழங்கல்கள்:**

01. எழுதுப்பொருட்கள்
02. புத்தகங்கள், பருவவெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம் - மரம்
04. அலுவலக சாதனங்கள் (ஸ்டீல் அலுமாரி, கபினெட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள் முதலியன)
06. சகலவகை ஹாட்வெயார் பெயின்டுகள், வாணிஸ்
07. இயந்திர கருவிகளும், உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும், உதிரிப்பாகங்களும்
09. வெட்டும் கருவிகள், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
10. ஐவுளிகள், யன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள், இரசாயனப்பொருட்களும், கண்ணாடிப்பொருட்களும்
12. மரம்
13. கட்டிடப்பொருட்கள் (மணல், செங்கற்கள், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
14. கும்புத்தடிகள், விளக்குமாறுகள், கால் துடைப்பங்கள் முதலியன
15. டயர்கள், டியூப்புகள், பற்றறிகள்
16. மோட்டார் உதிரிபாகங்கள், துணையுறுப்புகள்
17. ஆயுள்வேத மருந்துகள்
18. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
19. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்
20. இயனைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்
21. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துகள், குடைகள், சப்பாத்துகள் முதலியன
22. பைப்புகளும், பைப் இணைப்புகளும்
23. பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் உற்பத்திகளும்
24. மண்பாண்டப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்
25. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள், கருவிகள்
26. எலக்ரோனிக் உள் உறுப்புக்கள்

**சேவைகள்:**

01. அச்சிடுதல், புளொக் செய்தல், றப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள் கல்குலேட்டர்கள் முதலியன) திருத்த வேலைகள்
03. குளிர் சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. உசவ் தளபாடங்களின் திருத்த வேலைகள்
05. மரத் தளபாடங்களுக்கான திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னல்
07. உடைகள், கதவு, யன்னல், திரைச்சீலைகளைத் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகளைச் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் "பைண்டிங்" செய்தல்

**எந்திரவியல் சேவைகள்:**

01. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்
02. மின்மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்
03. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்)
04. மின்சார வயரிங் வேலைகள்
05. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள்/திருத்த வேலைகள்
06. இரும்பு கிறில்கள்/கேற்றுகள் உருவமைத்தல்/பொருத்துதல்
07. கட்டடங்கள்/கட்டட சேவைகள் அவற்றுடன் தொடர்புடைய இயந்திர சாதனங்கள் என்பவற்றுக்கான ஆலோசனைச் சேவைகள்
08. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குதல்/பொருத்துதல்
09. பட வரைதல் (புளு பிறின்ரிங் றோயிங்ஸ்)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்கல்கள்/சேவைகள்-1995' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின் வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.
2. பொறியியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக்கட்டணமாக ரூபா. 150/- பெறுமதியான, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்களை கோரப் பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்பொழுது விலை மனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்களை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் வழங்கல் அல்லது சேவை
02. பெயரும் விலாசமும்
03. தொலைபேசி இலக்கம்
04. வியாபார பதிவின் இலக்கமும் திகதியும்
05. வியாபாரத்தின் தன்மை
06. வங்கியாளர்களின் பெயர்
07. கிடைக்கக் கூடிய கடன் வசதிகள்
08. ICTAD பதிவு இலக்கம்/புத்தக இலக்கம் (3ற்கு மட்டும்)

**குறிப்பு:**

பொறியியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடமிருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

எந்திரவியல் சேவை 3 இற்கு பின்வருவோர் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

(அ) ICTAD தரப்படுதலின் கீழ் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு ஏதாவது அரசாங்க திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபைகளில் பதிவு செய்துள்ளவர்கள் (பதிவுப் புத்தகத்தின் போட்டோப் பிரதி/அதற்குரிய ஆவணத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

(ஆ) விண்ணப்பதாரர் கிளிநொச்சி / வவுனியா மாவட்டங்களில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அம் மாவட்டங்களில் உள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம் மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களைத் (7 இற்கு மட்டும்) தருக.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (தி-9686)

# MANAGER

A Leading establishment in Jaffna needs an energetic intelligent person to manage its functions, including General Administration, Business Promotion and personnel matters.

Please apply within 7 days with Curriculam Vitae aud names & addresses of two non-related referees to,

**Advt. No. 717,**
**C/o UTHAYAN,**
**Jaffna.**

(33857)

## 31ஆம் நாள் நெஞ்சகலா நினைவலைகளும் நன்றி நவிலலும்



### அமரர் இ. தா. மயில்வாகனம்

(பொடித்தம்பி)

(Retired Valuation Inspector)

மண்ணுக்கு: 17 — 04 — 1923

விண்ணுக்கு: 25 — 10 — 1994

மரபுவழி அறப்பணிகள் மனம்விரும்பிச் செய்தீர்கள் பெருமைபெறக் குடும்பநலம் பேணி மகிழ்ந்தீர்கள் அரனடியை நாடிடவோ அலறவிட்டுச் சென்றீர்கள் திருவடிகள் சேர்ந்தமைதி சாந்திபெறப் பணிகின்றோம்.

காலஞ்சென்ற திருவாளர் இ. தாமோதரம்பிள்ளை (J. P. U. M. Proctor S. C. & N. P., Chairman Village Council, Udupiddy Founder of Karanavai North Hindu School and Trustee of Hindu Temples) அவர்களுடைய கனிஷ்ட புத்திரன் அமரர் தா. மயில்வாகனம் அவர்களின் 31ஆம் நாளில் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்ட அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு, ஆறுதலளித்த அனைவருக்கும் அஞ்சலிகள், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் பல்வேறு வழிகளிலும் உதவியும், ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (24-11-1994) நடைபெறும் 31ஆம் நாள் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர், சகோதரிகள்
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
ம. நாகேஸ்வரி (மனைவி),
ம. குகதாசன் (குகன் - மகன்).

நவிண்டில்,
கரணவாய் மத்தி, கரவெட்டி. [33816]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பிந்தியாவது பரவாயில்லை

கல்லூரிகள் அல்லது வேறு கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்களுடன் இணைவதற்கு வசதி செய்யப்பட இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதன் பொருட்டு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்தைத் திருத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

உயர்கல்வி வட்டாரங்களில் மிக நீண்ட காலமாக உணரப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் புதிய அரசாங்கம் சிந்தை கொண்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

உயர்கல்வி பெறுவதற்கு உரிய அடிப்படைத் தகைமைகள் இருந்த போதிலும், அதற்கான வசதி அரசால் வழங்கப்படாததால், லட்சக் கணக்கான மாணவர்கள் அந்த உரிமையை அனுபவிக்க முடியவில்லை.

மாணவர்களில் ஆகக் கூடியது மூன்று சதவீத மானோருக்கு மட்டுமே உயர் கல்வி வாய்ப்புக் கிடைக்கிறது. மிகுதியானோர் அதுவும் இல்லாமல் வேலை வாய்ப்பும் இல்லாமல் "விடுபட்டு" போகிறார்கள்.

ஏனைய நாடுகளில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் அவற்றுடன் இணைந்த அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில்வதற்கும், பயிற்சி பெறுவதற்கும் பட்டதாரிச் சான்றிதழ்களைப் பெறுவதற்கும் சகல வசதிகளும் வாய்ப்பும் உண்டு.

ஆனால் இங்கு பல்கலைக் கழகத்திற்குள் பிரவேசிக்க முடியாமல் "தடக்குப்படும்" 97 சதவீதமானோரில் சுமார் இரண்டு சதவீதத்தினர் கூட வேறு வழிகளால் பட்டதாரிகளாகும், உயர் கல்விபெறும். வாய்ப்பு வசதி குறைவு

இலங்கையில் இப்போது மொத்தம் எட்டுப் பல்கலைக் கழகங்கள் மட்டுமே உள்ளன. நாட்டின் இன்றைய சனத்தொகையினதும், கல்வி அறிவு பெறுவோரினதும் எண்ணிக்கையோடு நோக்கும் போது இவை போதா. தகுதியும் திறமையும் உள்ளவர்கள் எல்லோருக்கும் இவற்றின் ஊடாக உயர்கல்வி வசதி அளிக்க இயலாதுள்ளது.

போதனைவசதி, இடவசதி மற்றும் முக்கியமான நிதி வசதி என்பனவற்றை அரசாங்கமே கண்டுபிடிப்பதும் கஷ்டம். நாட்டின் நிகர தேசிய உற்பத்தியில் 3.2 சதவீதம் மட்டுமே, உயர்கல்வி உட்பட்ட கல்விச் செலவுக்கு ஒதுக்கப்படுகிறது. இது தேவையை ஈடுசெய்வதற்கு போதுமானதல்ல என பிரதி உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலா சுட்டிக் காட்டியிருந்தார்.

இம்மாத முற்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற யுனெஸ்கோ பிராந்திய கருத்தரங்கில் — பட்டறையில் — இதனை மிகக் கவலையுடன் தெரிவித்த பிரதி அமைச்சர், அறுபதுகளில் இப்போதுள்ளதைவிடக் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருந்ததையும் ஒப்பீட்டு ரீதியாக எடுத்துரைத்தார்.

உயர்கல்வி வசதி— உயர் கல்வி உரிமை— அடிப்படை மனித உரிமைகளில் முக்கியமான உரிமை— தகுதியுள்ள எல்லோருக்கும் கிடைக்க வகை செய்வதற்குப் புதிய திட்டங்கள் அவசியம். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடும் தேவை.

போதிய தகுதியும், செய்திறனும் உடைய கல்வி நிலையங்களை பல்கலைக்கழகங்களுடன் இணைத்து உயர் கல்வி வசதி வழங்கும் முறை எமக்கு அயலில் உள்ள இந்தியாவில் மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னரே நடைமுறைக்கு வந்து விட்டது.

இதுவரை அத்தகைய திட்டத்தை இலங்கை நினைத்தும் பார்க்காதது துரதிர்ஷ்டமானது. புதிய அரசாங்கமாவது உயர்கல்வி பெறத் தகுதியுள்ளவர்களுக்கு அந்த வசதியை செய்ய முன்வந்திருப்பது பாராட்டத்தக்கது. எப்போதுமே செய்யாதிருப்பதைவிட, பிந்தியாவது செய்வது பரவாயில்லை அல்லவா?

# கணக்கு விவரம் சமர்ப்பிக்காத அரச சார்பற்ற நிறுவனங்கள்!

## மோசடி இடம்பெற்றிருக்கலாம் என்கிறார் அஷ்ரப்

கொழும்பு, நவ. 23

வடக்கு - கிழக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஜேர்மன் அரசு 28 கோடியே 80 லட்சம் ரூபா வழங்கியது.

இப்பணத்தைப் பெற்றுக் கொண்ட சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது செலவினங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் குறித்து உரிய முறையில் கணக்கு விவரங்களை புனர்வாழ்வு அமைச்சுக்கோ அல்லது திணைக்களத்துக்கோ சமர்ப்பிக்கத் தவறிவிட்டதால் இப்பணம் மோசடி செய்யப்பட்டிருக்கலாம் என்றும்—

இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தும்படியும் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் உத்தரவிட்டுள்ளார் என்று அரச சார்பு கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 28 கோடியே 80 லட்சம் ரூபா நிதி 25 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும்—

அகதிகளுக்கான வதிவிடங்கள், பாவனைப்பொருள்கள், சுகாதார வசதிகள் மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவற்றுக்கென இப்பணம் வழங்கப்பட்டது என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தப் பணம் உரிய முறையில் சென்றடைந்ததா என்பது குறித்து சந்தேகம் எழுந்ததை அடுத்தே விசாரணைக்கு அமைச்சர் உத்தரவிட்டார் என்றும்—

இது குறித்து விரிவான விசாரணை நடத்த ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமையில் குழு ஒன்றையும் அமைச்சர் நியமித்தார் என்றும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரண நடவடிக்கைக்கு என்று பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக் கொண்ட அரச சார்பற்ற அமைப்புகளின் பட்டியலையும் அமைச்சர் வெளியிட்டார். [இ-எ]

# 6 கோடி ரூபா மோசடி சந்தேகநபர் லண்டனுக்குத் தப்பியோட முயற்சி!

## அமைச்சர் ஐயரத்ன முறியடித்தார்

கொழும்பு, நவ. 23

ஐ. தே. க. ஆட்சியில் இலங்கை உர சொம்பனியில் 6 கோடி ரூபாவை சுருட்டிக் கொண்டதாகக் கூறப்படும் லண்டன் நிறுவனம் ஒன்றின் தலைவரான இலங்கையர் ஒருவர் நாட்டில் இருந்து தப்பியோட எடுத்த முயற்சியை அமைச்சர் டி. எம். ஜயரத்ன முறியடித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர், குற்றப் புலனாய்வுப் பணியகத்துக்கு அனுப்பிய தகவலை தொடர்ந்து பொலீஸார் சந்தேக நபருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

நீதிவான் சந்தேக நபரை 10 லட்சம் ரூபா பிணையில் விடுவித்து, விசாரணையை ஒத்தி வைத்தார்.

40 ஆயிரம் மெற்றிக்தொன் உரத்தை இலங்கை அரசுக்கு விற்பனை செய்வதாக இவர் உடன்படிக்கை செய்தார் என்றும்—

அதற்கிணங்க 22ஆயிரம் மெற்றிக் தொன் உரத்தை மட்டுமே அவர் விற்றார் என்றும் — எஞ்சிய உரத்தை வழங்காது மோசடி செய்தார் என்றும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது (இ-எ)

# சந்திரிகாவுக்குள்ள தேசிய ஆதரவை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும்

## இந்திய அரசியல் விமர்சகர் கருத்து

கொழும்பு, நவ. 23

இலங்கையின் சமாதானத் தூதராக தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா விளங்குகின்றார். அவருக்கு தேசிய ஆதரவு பூரணமாக உள்ளது. இதனை இந்தியாவும் அங்கீகரிக்க வேண்டும். சமாதான நடைமுறைக்கு உதவும்படி கோரப்பட்டால் மட்டுமே இந்தியா இலங்கைக்கு உதவ வேண்டும்.

இந்தியாவின் பிரபல விமர்சகரும் சிந்தனையாளருமான திரு. பபானி செங்குப்தா சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

சந்திரிகாவின் தலைமைத்துவம் 21 ஆவது நூற்றாண்டுக்கான அடையாளமாகத் தெரிகிறது. இந்தியர்கள் இதன் அர்த்தத்தை புரிந்து கொள்வார்கள் என்று நம்புகின்றேன்—என்றும் அவர் தெரிவித்தார்.

'விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா வலியுறுத்துமானால் விடுதலைப் புலிகளுடனான இலங்கை அரசின் சமாதானப் பேச்சு பலனளிக்காது போய்விடுமே. இது பற்றிய தங்கள் கருத்து...' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

'சமாதான முயற்சி வெற்றியளிப்பதற்கு பிரபாகரன் இலங்கையில் இருக்க வேண்டும். இதனை இந்தியா உணர வேண்டும். சமாதானப் பேச்சுகளின் போது பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா கோரக்கூடாது. அதற்கு பதில் சமாதானப் பேச்சுகளுக்கு சாதகமாக நடந்துகொள்ளும்படி பிரபாகரன் மீது' இந்தியாவுக்கு செல்வாக்கு இருந்தால் அதனை இந்தியா பயன்படுத்த வேண்டும்'—என்றும் திரு. பபானி செங்குப்தா தெரிவித்தார். (இ-எ)

# சிறுபான்மை இனத்தவர் உபஜனாதிபதியாகவர அரசமைப்பில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்

## ஹட்டன் கருத்தரங்கில் பேராசிரியர் லியனகே

கொழும்பு, நவ. 23

பல்லின மக்கள் வாழும் இலங்கையில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் உபஜனாதிபதியாக வர வாய்ப்பளிக்க வேண்டும். இலங்கை அரசமைப்பில் இதற்கு இடமில்லை. அது சைப்பிரஸில் இடம் பெற்றுள்ளது.

பேராசிரியர் சுமணசிரி லியனகே ஹட்டனில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

1918 இல் இருந்து தமிழர்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு அரசியல் வழி மூலம் தீர்வு காண முயற்சித்து வந்தனர். அது வெற்றி பெறவில்லை.

ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பது சுலபம். அதனை நிறுத்துவது கடினம். ஆகவே யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற திடசித்தத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

மத்திய மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் லால் விஜேநாயக்கா பேசுகையில்,

"1956 இல் சுயபாஷா திட்டம் வந்ததைத் தொடர்ந்து நிலைவரம் மோசமானது. அன்று முதல் நாட்டை சிங்கள அரசாங்கங்கள் தான் ஆண்டு வந்தன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உடன்படிக்கைகள் செய்யப்பட்டன. ஆனால் அவை நிறைவேற்றப்படவில்லை.

அதனால் தான் தமிழர் அரசுக்கு எதிராக மாறினர். இன்று பிரச்சினை போராளிகளின் கைக்குப் போய்விட்டது.

"இந்திய இலங்கை உடன்படிக்கை வந்தது. அதன் கீழ் வடக்கு - கிழக்கில் மாகாண சபை இயங்க அனுமதிக்கப் படவில்லை. 'இணைப்பு -3' முறையாக அமுல் செய்யப் படவில்லை.

இந்த பதினொராவது மணித்தியாலத்திலாவது யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர, சமாதான முயற்சிகளில் உளப்பூர்வமாக ஈடுபட வேண்டும்" — என்று கூறினார்.

பேராசிரியர் ஜயதேவ உயங்கொட பேசுகையில் - யுத்தத்தை இன்னொரு யுத்தத்தினால் நிறுத்தி விட முடியாது என்று கூறினார். (இ-எ)

# மாவீரர் உதிரத்தால் புதிய புறநானூறு இந்த மண்ணில் எழுதப்படுகிறது

தமிழீழ தேசிய திருநாள் மாவீரர் நாள் இன் நன்நாளைக் கட்டியம் கூறும் மாவீரர் வாரத்தின் மூன்றாம் நாள் இன்று.

தமிழனின் வீரத்திற்கும், ஈகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் மாவீரர்கள்.

எமது மொழியை, பண்பாட்டை, பெருமையைத் தாயகத்தை ஸ்ரீலங்காப் பேரினவாதத்தின் கொடூரத்தினின்றும் காப்பதற்காக இன்று போராடிக் கொண்டிருக்கிறோம்.

எமது விடுதலைப் போராட்டம் தர்மத்தின், நியாயத்தின், மனிதத்துவத்தின் பாற்பட்டது என்பது மாவீரர்களின் ஈடிணையற்ற தியாகம் அனைத்துலகத்திற்கும், கட்டிநிற்கிறது. எமது போராட்டம் மக்கள் மத்தியில் நின்று அரும்பு கட்டி மக்களால் ஊட்டம் தரப்பட்டு பாரிய விருட்சமாக பரிணாமம்கண்டு வருகின்றது

எந்த வல்லாதிக்க சக்தியாலும் அழிக்க முடியாத வரலாற்று வழிகாட்டியாக எமது வளங்களில், எமது ஆற்றலில் தளம் கொண்ட போராட்ட வடிவமாக உயர்ந்து நிற்கிறது. எமது தேசியத்தலைவரது வழிகாட்டலில் ... வரலாற்றில் ... தேசிய இனங்களில் புதிய போராட்ட முறைமையாக முன்னெடுக்கப்படுகிறது எமது விடுதலைப்போராட்டம் அனைத்துலகும் வியந்து நிற்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டம் மாவீரர்களின் உதிரத்தால் புதிய புறநானூறாக எமது தாயக மண்ணில் எழுதப் படுகிறது.

மாவீரர்கள் எமது புதல்வர்கள், இவர்களது நெஞ்சக் கனலை மாவீரர் வாரத்தில் நினைவு கூருவோம். வட்டங்கள் தோறும் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ... அணிதிரண்டு ... வோம்.

எமது சுதந்திரம், கௌரவம், அச்சமற்ற வாழ்க்கை எமது தலைவனின் காலத்திலேயே உறுதி செய்யப்பட வேண்டும். மாவீரர் நாளன்று பிரகாசிக்கப்போகும் மாவீரர் நினைவுச் சுடர், மாவீரர் மூச்சாக ஒலிக்கப்போகும் ஆலயமணி நாதம் எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஒளியைத் தரட்டும். எமது தேசம் உருவாகட்டும் என்று திடம் கொள்வோம்.

—யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்க.

## ஹமில்டனுக்கு ராஜதந்திர பதவி வழங்கப்படலாம்

கொழும்பு, நவ. 23

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியில் இருந்து விலக்கப்படும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கு ராஜதந்திரப் பதவி வழங்கப்படலாம் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

60 வயதைத் தாண்டிய ஜெனரல் வனசிங்கா முறைகேடான ஆயுதக் கொள்வனவு விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இறுதியாக 7 கோடி 20 லட்சம் அமெரிக்க டொலர் ரஷ்ய ஆயுதக் கொள்வனவு விவகாரத்தில் அவர் பெயரும் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவுக்கு ராஜதந்திரப் பதவி வழங்கப்பட்டது போன்று, ஜெனரல் வனசிங்காவுக்கும் வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக சில வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது. (இ-எ)

அமைச்சர்கள்

## கதிர்காமர், குணரத்தினா அமெரிக்கா செல்கின்றனர்

கொழும்பு, நவ. 23

வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கைத்தொழில் அமைச்சர் சி. வி. குணரத்தினாவும் விரைவில் அமெரிக்கா செல்லவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது

ஆடைத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அடுத்த வருட கோட்டாவின் ஒரு பகுதியை, அடுத்த சில வாரங்களில் பெற்றுக் கொள்வது தொடர்பான பேச்சுக்களை நடத்தவே அமைச்சர்கள் இருவரும் அமெரிக்கா செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — ஆடைத்தொழிற்சாலைகளை மூடாமல் தொடர்ந்து செயற்பட வைப்பதற்கு அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-6)

## சிலை செய்ய நிதி உதவி

யாழ்ப்பாணம், நவ. 23

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் சேர். பொன். இராமநாதனின் உருவச்சிலை ஒன்று நிறுவப்பட உள்ளது.

இச் சிலையை உருவாக்குவதற்கு உதவும் விதத்தில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சுவாமி சித்ரூபானந்தா அண்மையில் ஐயாயிரம் ரூபா அன்பளிப்புச் செய்தார். (அ-30)

## மாவீரர் நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 23

மாவீரர் நாள் தொடர்பான விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் ஏற்பாட்டிலான பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை நண்பகல் 12மணிக்கு மண்டைதீவு றோ. க. வி., புங்குடுதீவு ஸ்ரீகணேசா ம. வி., புங்குடுதீவு சுப்பிரமணியர் வி., புங்குடுதீவு கமலாம்பிகை வி. ஆகியவற்றிலும் பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் ம. வி யிலும் நடைபெறும் (ச)

## 5 குழுக்களை நியமிக்க முடிவு

கொழும்பு, நவ. 23

பத்திரிகைச் சுதந்திரம், பத்திரிகையாளர்களின் நலன்களைக் கவனிப்பது ஆகியன தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஐந்து குழுக்களை நியமிப்பது என்று தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா முடிவு செய்துள்ளார். (இ-6)

# அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

பல அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்களை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தயாராகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர், அமைச்சுகளின் புதிய செயலாளர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியல் ஒன்றை சந்திரிகா தயாரித்து வைத்திருந்தார் என்றும்—

அதன்படியே ஜனாதிபதி புதிய செயலாளர்களை நியமிக்கவிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன:

இந்நியமனங்களின் போது சேவைமூப்பு கவனிக்கப்படமாட்டாது என்றும்—

தகைமை மற்றும் தேவை ஆகியவற்றுக்கே முன்னுரிமை வழங்கப்படும்என்றும்— அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (இ-6)

## பொருள்களை இறக்கிய பின்பே "ஹபரண" புறப்படும்

யாழ்ப்பாணம், நவ. 23

விபத்து வழக்கு தொடர்பாக கொழும்புக்கு அழைக்கப்பட்ட 'ஹபரண' கப்பல் தொடர்ந்து பொருள்கள் இறக்கும் பணியை பருத்தித் துறையில் மேற்கொண்டு வருகிறது.

வடக்குக்கு பொருள்கள் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட சமயம் விபத்துக்குள்ளானதில் 'ஹபரண' கப்பல் மீது நஷ்டஈட்டு வழக்கு ஒன்று கொழும்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் நடைபெறவிருந்ததால் கப்பலை உடன் கொழும்பு திரும்புமாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அந்த அழைப்பை பொருட்படுத்தாமல் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்படுவதாகவும்—

பொருள்கள் இறக்கி முடிந்ததும் அக்கப்பல் கொழும்பு நோக்கி புறப்படலாம் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அர்த்த சாஸ்திரமும் படித்துள்ளாராம் ரணில்

கொழும்பு, நவ. 23

"அர்த்த சாஸ்திரமும் படித்துள்ளேன்" — என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

அரசியலில் யார் உங்களின் ஆசான்? — என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் —

"ஜே. ஆர் ஜெயவர்த்தனா சிறப்பாக எனக்கு தந்திரோபாயத்தைக் கற்றுத் தந்தார். பிரேமதாஸா ஒரு செயல் வீரர். அவரும் எனது ஆசான்

தேசபிதா டி. எஸ். சேனநாயக்காவின் வரலாறையும் படித்துள்ளேன்; 'அர்த்த சாஸ்திர' போன்ற பண்டைய நூல்களையும் படித்துள்ளேன்" — என்றும் ரணில் சண்டே ஒப்சேர்வருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

# லஞ்சத் திணைக்களம் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 23

கடந்த ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் பதவி வகித்த கூட்டுத்தாபனத் தலைவர்கள், பணிப்பாளர்களின் நடவடிக்கைகள் குறித்து லஞ்சத் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 300 வரை இருக்கும் என்று தெரிவிக்கப் படுகிறது.

பத்துப்பேர் மீதான விசாரணை முடிவடைந்து விட்டது. அவர்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் மேல் நடவடிக்கைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

இதேவேளை — 16 அரச அதிகாரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் வழக்குத் தொடர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## முன்னாள் எம். பி. உட்பட 11 பேருக்கு விளக்க மறியல்

கொழும்பு, நவ. 23

பொலன்னறுவ மாவட்ட முன்னாள் ஐ.தே.க எம்.பி ஏ. டி. பி. எக்கநாயக்கா உட்பட 11 பேர், பொதுத் தேர்தல் கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 28 ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி பொலன்னறுவை நீதிவான் பி. விஜேசிங்கா உத்தரவிட்டார்.

இச் சம்பவத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான 16 வயது இளைஞன் தஜீவ் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தனியார் நிறுவனத்தின் விமான சேவை விரைவில் ஆரம்பம்

கொழும்பு, நவ. 23

இலங்கையில் தனியார் நிறுவனம் ஒன்று புதிய விமான சேவை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கிறது.

இச்சேவைக்கு ''பீஸ் எயார்'' (Peace Air) என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் சின்னமாக புறா தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைவர் காமினி வெத்தசிங்க ஆவார்.

6 போயிங் 747, மூன்று போயிங் 727 மற்றும் 3 ஷோர்ட் 360 ரக விமானங்களை இந்த நிறுவனம் சேவைக்கு விடவுள்ளது.

பெரிய விமானங்கள் சரக்குப் பொதிகளை மட்டுமே ஏற்றிச் செல்லும். சிறிய ஷோர்ட் 360 ரக விமானமே பொதிகளுடன் குறைந்தது 36 பயணிகளையும் ஏற்றிச் செல்லக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறிய விமானம் நாட்டில் உள்ள உள்ளூர் விமான நிலையங்களுக்கு இடையேயும் அபுதாபி, ஷார்ஜா ஆகிய இடங்களுக்கும் இடையேயும் சேவை புரியும் என்று அறிவிக்கப்படுகிறது.

பெரிய போயிங் விமானங்கள் அத்லாந்திக் மற்றும் பசிபிக் வழியாக கொழும்பு, அம்ஸ்ரடாம் நியூயோர்க்குக்கு இடையேயும், கொழும்பு, ஷாங்காய் லொஸ் ஏஞ்சல்ஸுக்கு இடையேயும் சரக்கு ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எல்லா விமானங்களும் அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. விமான மோட்டிகளும் பொறியியலாளர்களும் விமானங்களுடனே கொழும்புக்கு வரவுள்ளனர்.

எப்போது இருந்து இச்சேவை ஆரம்பிக்கும் என்பது தெரிவிக்கப்படவில்லை.

## ஐ.தே.கவிலிருந்து என்னை விலக்குவதற்கு முயற்சி

### ஹட்சன் சமரசிங்கா கூறுகிறார்

கொழும்பு, நவ. 23

தம்மை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்ற சிலர் முயற்சித்து வருவதாக, ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட ஹட்சன் சமரசிங்கா தெரிவித்தார்.

எவர் முயற்சி செய்தாலும் தம்மை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எவராலுமே விலக்க முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.


## உடன் தேவை

★ பலகாரவகைகளும்
★ சுவீட்ஸ் வகைகளும்
தயாரிக்கக் கூடியவர் உடன் தேவை.

தொடர்பு கொள்ளவும்:

**லிங்கம் குளிர் களி நிலையம்**
அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி) (33840)


தென்னிந்திய திருச்சபை
யாழ். அத்தியட்சாதீனம்
காலம் சென்ற

**அருள்திரு L. N. கிச்கொக்**
அவர்களின் வாழ்க்கைக்கு

## நன்றி செலுத்தும் ஆராதனை

**23–11–1994** புதன்கிழமை மாலை **4-00** மணிக்கு நவாலி தென்னிந்திய திருச்சபையில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அ. ஜெயக்குமாரன்,
செயலாளர்,
யாழ். தென்னிந்திய திருச்சபை,
ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை. [சி-9718]

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சுந்தரலிங்கம் பிருந்தா

(கொழும்புத்துறை இ. மகா வித்தியாலய மாணவி)

சந்தனமாதா கோயில் ஒழுங்கை அரியாலை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய பிரதம லிகிதர் (நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம்) சின்னத்தம்பி சுந்தரலிங்கம் பத்மாவதி ஆகியோரின் இளைய புத்திரி பிருந்தா 19–11–1994 இல் காலமாகிவிட்டார்.

இவர் ஸ்ரீதேவி (கிளிநொச்சி), திலீப்குமார் (பிரான்ஸ்), சசிதா, இதயகுமார் (பிரான்ஸ்), சுதர்சினி (கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீரங்கநாதன் (குடியேற்ற உத்தியோகஸ்தர், உருத்திரபுரம்), கோமளா (பிரான்ஸ்), குணேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23–11–1994) புதன்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி. சுந்தரலிங்கம்
(தந்தை)
சந்தனமாதா கோயில் ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம். [33861]

### திருமதி கனகரத்தினம் தங்கம்மா

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் தங்கம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, காலஞ்சென்ற சபாரத்தினம், சாவகச்சேரி அம்பாள் பார்மசி உரிமையாளர் முருகேசு, செல்வரத்தினம், பரமேஸ்வரி, திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (23–11–1994) முற்பகல் 11-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. முருகேசு
நீர்வேலி தெற்கு [33868]

## இந்திய அணி வென்றது

இந்திய—மேற்கிந்திய அணிகளுக்கு இடையில் பம்பாயில் நடந்த முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 96 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நேற்றுக்காலை ஆட்டம் ஆரம்பமாகி 25 நிமிடங்களில் மேற்கிந்தியா தனது எஞ்சிய இரு விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியடைந்தது.

இந்தியா-முதல் இன்னிங்ஸ்—272, இரண்டாவது இன்னிங்ஸ்—333

மேற்கிந்தியா—முதல் இன்னிங்ஸ்—243, இரண்டாவது இன்னிங்ஸ்—266.

### 'மினிபட்ஜெட்'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி சமர்ப்பிக்கப்படும் என்றும் — பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பான விவாதம் இன்று தொடர்ந்து நடைபெறும். (ஒ-க-3-6)

### ஆயுதத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியும்.

''ஒவ்வொரு துறை சார்ந்தோரும் தாம் செய்யும் பணிகளில் திருப்தியடைதல் கூடாது. திருப்தியடைந்த மனிதர்களாக இருப்பது, வளர்ச்சிக்கு உரியதல்ல.

திருப்தி காணாத மனிதர்களாக இருந்தால்தான் நாம் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருப்போம்.

இதனால் நிறைய விடயங்களை தரமாக்க முடியும். இதற்காக நிறையப் படிக்க வேண்டும். அறிவை வளர்க்க வேண்டும்.

உதாரணமாக ஒரு படம் எடுப்பவர் நூற்றுக் கணக்கான படங்களை பார்த்திருக்க வேண்டும், பொறுப்புணர்வுடன் பலரின் அபிப்பிராயங்களையும் பெற்று செயற்பட வேண்டும்.

கலைக்கு சர்வாதிகாரம் இருக்கக்கூடாது. அப்படியிருந்தால் கலைத்துறையில் வளர முடியாது. அத்துடன் கால மாற்றத்துக்கு ஏற்பவும், வளர்ந்து செயல்பட வேண்டும்.

எமது தேசத்தில் இலைமறைகாயாக மறைந்து இருப்பவர்களின் திறமைகளை வெளிக்கொணரவேண்டும்.

இதன் மூலம் தான் எமது வளர்ச்சியை கூட்ட முடியும். வசதிகள் இல்லாத நம்மிடம் இருந்து தரமான படைப்புக்கள் வெளிவருவதை வெளியுலகம் அதிசயமாக பார்க்கின்றது.

அதற்கு ஏற்ப நாம் இன்னமும் வளரவேண்டும்.

தமிழீழத்தில் எடுக்கும் திரைப்படங்களில் போராளிகளை மட்டும் காண்பிக்காது இந்தப் போராட்டத்தில் மக்கள் படும் துன்பங்களையும் நெருக்கடிக்கு மத்தியில் மக்கள் எப்படி வாழ்கின்றனர் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

கட்டி எழுப்பப்பட்டுள்ள தமிழீழத்தின் வளர்ச்சிக்கு ஆயுதத்தை மட்டும் நம்பியிராது, எல்லாத்துறைகளிலும் வளரவேண்டும் என்பதில் நாம் அக்கறையாக உள்ளோம்.

எதிர்காலத்தில் எலக்ரோனிக், கம்பியூட்டர் யுகம் வரப் போகிறது. இனி நாம் அதில் வேகமாக வளர்வதன் மூலம் தான் நாம் மா[illegible] அடைவோம் — என்று தலைவர் வே. பிரபா[illegible] தெரிவித்தார். (ஒ-[illegible])

## சாயிபாபா அவதார தின நிகழ்ச்சிகள்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 69ஆவது அவதார தினம் இன்றாகும்.

அதனையொட்டி குடாநாட்டில் உள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

திருநெல்வேலியில் உள்ள சாயி சேவா நிலைய மண்டபத்தில் இன்று அதிகாலை 4-45 மணிக்கு ஓம்காரத்துடன் ஆரம்பமாகும் பிறந்த தின விழா பி.ப. 5-15 மணி வரை தொடர்ந்து நடைபெறும்.

இன்றைய விழாவில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ருபானந்தா விசேட விருந்தினர் உரை நிகழ்த்துவார்.

★ ★ ★

சுன்னாகம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி நிலையத்தில் பகவானின் அவதார தின நிகழ்ச்சிகள் பி. ப. 2-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்ச்சிகளின் போது பகவான் அருவமாக அமர்ந்து அருள்பாலிக்கவென விசேட சிம்மாசனம் ஒன்று திரு.பி.செல்வரத்தினம் அவர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்படும்.

இந்தச் சிம்மாசனம் பாபாவினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வமத சின்னங்களையும் சனாதன தர்ம சிந்தனைகளையும் பிரதிபலிக்கும் தெய்வீக அம்சங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

சாயி பக்தர்களின் இல்லங்களிலும் இன்று விசேட பஜனைகள், பூசைகள் நடைபெறுகின்றன. (அ-89)

### 2 ஆம் கட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்தீர்வு மூலம் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள் என்றும்—

அரசியல் வட்டாரங்கள்கூறியதாக ''லங்காதீப'' மேலும் தெரிவித்துள்ளது.

இதேசமயம்—

இரண்டாம்கட்டப் பேச்சை நடத்துவதற்கு பொருத்மான திகதிஒன்றைத் தெரிவு செய்வதாக அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் 'லங்காதீப' தெரிவித்தது.

### ஆறு ஹெலிகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொனிக் விமானங்களும்' 22 பெல் ரக ஹெலிகளும், 6 எம்.ஐ. ரக ஹெலிகளும், 2 டொல்பின் ரக ஹெலிகளும், சொஸ்னா ரக வேவு விமானங்கள் எட்டும், வை 8 ரக போக்குவரத்து விமானம் ஒன்றும், வை 12 ரக போக்குவரத்து விமானங்கள் ஒன்பதும், அவ்ரோ விமானங்கள் ஐந்தும், பயிற்சி விமானங்கள் பன்னிரண்டும் உள்ளன. (உ-ஒ-3)

### மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் அமைக்கப்பட்டது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முக்கியஸ்தர்களும் பணியாளர்களும் சேர்ந்து இந்தப் புதியவீதியை அமைத்தனர்.

**புத்தூரில்**

பூநகரி ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களினதும், புத்தூரைச் சேர்ந்த மாவீரர்களினதும் திருவுருவப் படங்கள் இன்று பிற்பகல் புத்தூர் மாவீரர் மண்டபத்தில் திறந்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து மாவீரர் நினைவுரைகளும் இடம் பெறும்.

இதேவேளை, நாவாந்துறைச் சந்தியில் கப்டன் மணிவண்ணன், இரண்டாம் லெப். இசைவாணன் ஆகியோரின் திருவுருவப் படங்கள் இன்று காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

கொட்டடிச் சந்தியில் லெப். கலைப்பிரியன், வீரவேங்கை மாணவன் ஆகியோரின் திருவுருவப் படங்கள் இன்று காலை 10.30 மணிக்கு திரைநீக்கம் செய்யப்படும்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையின் மாவீரர் தினக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

சாவகச்சேரி ப.நோ. கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி பனை, தென்னைவள அ.கூ. சங்கம், தென்மராட்சி மேற்கு ப.நோ. கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து நடாத்தும் மாவீரர் நாள் நிகழ்ச்சி [illegible] சாவகச்சேரி இந்துக்கல்லூரி [illegible] (அ-15-17-173-31)

# 30 புதிய பிரதி அமைச்சர்கள்

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா முன்னிலையில் 29 பிரதி அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதி மாளிகையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டனர். இவர்களில் ஐவர் புதியவர்கள். கடந்த 14ஆம் திகதி அமைச்சரவை பதவி ஏற்ற சமயம் பாதுகாப்பு பிரதி அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அனுருத்த ரத்வத்தையுடன் சேர்த்து பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆகும்.

பிரதி அமைச்சர்கள் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ பி. பி. ஜீ. கலுகல்ல | — அரசியல் விவகாரம், நீதி. |
| ★ டி. பி. விக்கிரமசிங்கா | — வெளிவிவகாரம். |
| ★ அத்தாவுத செனவிரத்ன | — பொதுநிர்வாகம், பெருந்தோட்டத் துறை, நாடாளுமன்ற விவகாரம். |
| ★ சமரவீர வீரவன்னி | — விவசாயம் |
| ★ மொன்டிகோபல்லாவ | — தொழில், தொழில் பயிற்சி. |
| ★ மஹிந்த விஜேசேகர | — கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள், புனர்வாழ்வ, புனரமைப்பு. |
| ★ திருமதி சுமேதா பீ ஜயசேன | — புத்தசாசனம். |
| ★ ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே | — திட்டமிடல், இனவிவகாரம், தேசிய நல்லிணக்கம். |
| ★ நந்தமித்த எக்கநாயக்கா | — காணி, வனவியல். |
| ★ எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா | — தபால் தொலைத் தொடர்பு. |
| ★ மைத்திரிபால சிறிசேன | — நீர்ப்பாசனம். |
| ★ மில்றோய் பெர்னாண்டோ | — கடற்றொழில், நீரகவள அபிவிருத்தி. |
| ★ எஸ். எஸ். எம். அபூபக்கர் | — விஞ்ஞானம், தொழில் நுட்பம், மனித வள அபிவிருத்தி. |
| ★ பேர்டி திஸாநாயக்கா | — கைத்தொழில் அபிவிருத்தி. |
| ★ எஸ். பி. நாவின்ன | — வீடமைப்பு, நிர்மாணம். |
| ★ எஸ். எம். அலவி மௌலானா | — தொடர்பு, சாதனங்கள். |
| ★ ஜீவன் குமாரணதுங்கா | — இளைஞர் விவகாரம், விளையாட்டுத் துறை, கிராமிய அபிவிருத்தி. |
| ★ சந்திரசிரி கஜநிர | — கூட்டுறவு, மாகாண சபைகள், சுதேச மருத்துவம். |
| ★ பொ. சந்திரசேகரன் | — பொது வசதிகள், தோட்டத்துறை வீடமைப்பு. |
| ★ அத்துல நிமலசிரி ஜெயசிங்கா | — மின்சக்தி, எரிபொருள். |
| ★ திருமதி நிரூபமா ராஜபக்ஷ | — உல்லாசப் பயணம், விமானப் போக்குவரத்து, |
| ★ திருமதி பவித்திராவன்னியாராய்ச்சி | — சுகாதாரம், நெடுஞ்சாலைகள், சமூக சேவைகள். |
| ★ பேராசிரியர் விஸ்வவர்ணபால | — உயர்கல்வி. |
| ★ பேராசிரியர் ஏ. வி. சுரவீர | — கலாசாரம், சமய விவகாரம். |
| ★ பிரியந்தினி அபேவீரா | — உள்நாட்டு, வெளிநாட்டு, வர்த்தகம், வாணிபம், உணவுத் துறை. |
| ★ லக்ஷமன் கிரியெல்ல | — உள்நாட்டு விவகாரம். |
| ★ றெஜி ரணதுங்கா | — போக்குவரத்து, சுற்றாடல், மகளிர் விவகாரம். |
| ★ திருமதி ஹேமா ரத்நாயக்கா | — கால்நடை, அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில். |
| ★ ஜோன் செனவிரத்ன | — கல்வி. |
| ★ அனுருத்த ரத்வத்தை | — பாதுகாப்பு. |

## உயர் தொழில் ஆங்கில கற்கை நெறி

யாழ்ப்பாணம், நவ. 23

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நடத்தும் உயர் தொழில் ஆங்கில கற்கை நெறியில் பயில விரும்புவோர் நாளை 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை யாழ். பிராந்திய அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இயங்கும் திறந்த பல்கலைக்கழக பிராந்திய அலுவலகத்தில் பதிவுகளைச் செய்யலாம் என்று பிராந்திய இயக்குநர் திரு.ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார். [அ]

## கப்பலில் செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பணம், நவ. 23

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக கப்பலில் செல்ல தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், உதவியாளர்களையும் நாளை வியாழன் காலை 7மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்குமாறு வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளரும், உதவியாளரும் இரண்டுநாட்களுக்குப்போதுமான உணவு, குடி தண்ணீரை எடுத்து வருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஒ-15)

## தேச விமுக்தி ஜனதா கட்சிக்கு ஓர் எம்.பி.பதவி

கொழும்பு, நவ. 23

ஜனாதிபதியாக சந்திரிகா பதவி ஏற்றதால் நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு எம். பியாக நியமனம் பெற்று நேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பண்டுகாபய பண்டாரநாயக்கா தேச விமுக்தி ஜனதா கட்சியைச் சேர்ந்தவர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலில் இவர், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் சேர்ந்து போட்டியிட்டார். (உ-க-எ)

## இன்றுபொதுஅறிவுத்தேர்வு

யாழ்ப்பாணம், நவ. 23

9, 10, 11, 12, 13 ஆகிய ஆண்டுகளுக்கான பாடசாலை மாணவர்களுக்கான இடை நிலை, உயர் நிலைக்கான பொது அறிவுத் தேர்வு முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று புதன் கிழமை நண்பகல் 12.30மணிக்கு பாடசாலைகளில் நடைபெற விருக்கிறது.

இந்தத் தேர்வுக்கான சகல ஏற்பாடுகளும் கல்விக் கோட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விடைத்தாள் மதிப்பீடுகளை அந்தந்தப் பாடசாலைகளே மேற்கொள்ள வேண்டும் என்று தேர்வு ஆணையாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கேட்டுள்ளார். (ஒ-3)

## பொ.ஐ.மு.அரசாங்கத்தின் பொதுசனத் தொடர்பில் "வசந்தம்" நிலவுகின்றது

### ஐ.தே.க. தலைவர் ரணில் கிண்டல்

கொழும்பு, நவ. 23

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் சுதந்திர பொதுசனத் தொடர்பு கொள்கையில் 'வசந்தம்' தான் தெரிகிறது.

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக வசந்த ராஜா நியமிக்கப்பட்டது குறித்தே அவர் இவ்வாறு கிண்டலாகக் குறிப்பிட்டார்.

கடந்த அரசின் காலத்தில் பொதுசனத் தொடர்பு கொள்கையில் காணப்பட்ட 'குளிர்காலத்'திலும் பார்க்க இன்றைய அரசின் 'வசந்த'காலம் சிறிது நன்மையாக இருக்கிறதல்லவா? — என்று செய்தியாளர் கேட்டதற்கு —

ரணில், ''வசந்தத்துடன் ஒப்பிடுகையில் குளிர்காலம் அமைதியாகத் தெரிந்தது. இது ''அதிருப்தி'' நிறைந்த வசந்தமாக உள்ளது.'' — என்று சொன்னார். (உ-எ)

## தோட்டத்துறை வீடமைப்பு பிரதி அமைச்சராக நேற்று சந்திரசேகரன் பதவி ஏற்பு

கொழும்பு, நவ. 23

தோட்ட வீடமைப்பு என்ற புதிய அமைச்சு உருவாக்கப்பட்டு அதற்கு திரு. பி. சந்திரசேகரன் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சந்திரசேகரன் தோட்டத்துறை வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் பிரதி அமைச்சராக நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் இதுவரை வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவுத் துறை பிரதி அமைச்சராக பதவி வகித்து வந்தார் என்பது தெரிந்ததே. (ஒ-க)

### வங்காள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நாட்டின் வடக்கு கடலோரப் பகுதிக்கும் இடையில் நேற்று நிலை கொண்டிருந்ததாகவும் —

இதன் காரணமாக தமிழகக் கரையோரப் பகுதிகளிலும், புதுச்சேரியிலும் மழை பெய்யக்கூடும் என்றும் —

இந்திய வானொலி நேற்று மாலை அறிவித்தது. (உ-3)

## குடிநீர் வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாநகராட்சி மன்றம் பாஷையூர்ப் பகுதி மக்களுக்கு தாங்கி ஒன்றை அமைத்து குடிநீரை விநியோகித்து வருகின்றது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org